மூன்றாவது தேர்ச்சி : இறைகட்டளைகளைப் பின்பற்றுவதன் வழியாக மனித உறவுகளை வளர்த்துக் கொள்வர்

14

## 3.2. இறையாசீர் வழங்கும் இறை ஆராதனை

பலவருடங்களாக வேலை தேடியும் கிடைக்காமலிருக்கிறதே

எண் சோதிட சாஸ்திரத்தை நம்பினால் வாழ்வில் முன்னேற்றத்தை அனுபவிக்கலாமே

தேசிக்காயில் மந்திரம் வெட்டிக் கழித்தால் சூனியத்தால் சூனியங்களை அகற்றிவிடவும்

அடிக்கடி பய உணர்வினால் என் மகள் தனிமையில் கதைக்கிறாளே

சோதிடம் பார்த்தால் பிரச்சனைக்கான தீர்வு கிடைக்கும்

வீட்டிலே அடிக்கடி பிரச்சனைகளும் சண்டைகளும் வீண்கவலைகளும் தோன்றுகிறதே

தொழில் முன்னேற்றமில்லாமலும்
கல்வியில் வளர்ச்சி ஏற்படாமலும்
இருக்க பக்கத்து வீட்டார்
பில்லி சூனியத் தகடுகளை
எம் வளவில் புதைத்தார்களோ?

இன்று நம்மைச் சூழவுள்ளவர்கள் மத்தியில் மேலே கூறப்பட்ட வசனங்கள், அவர்களது உள்ளத்திலிருந்து வெளிவரும் துன்பங்களையும், அவர்களாலே கூறப்படுகின்ற தீர்வுக்கான வழிகளையும் வெளிக்காட்டுகின்றன.

பல்வேறு விசுவாசத்தைக்கொண்ட மக்கள் மத்தியில் வாழும் கிறிஸ்தவனான நீர் இப்போது எந்நிலையில் இருக்கிறீர்? உமது குடும்பத்திலும் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டிருக்கிறீரா? பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவற்றைத் தீர்க்க நீங்கள் அவிசுவாசச் செயல்களில் ஈடுபட்டதுண்டா?

மேற்கூறியவைபற்றி கலந்துரையாடுங்கள்.

இது பற்றி இறைவன் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

உங்கள் நடுவில் ஓர் இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவன் தோன்றி உங்களிடையே ஓர் அடையாளம் அல்லது அருஞ்செயல் காட்டுவேன் என்று சொல்லலாம். அவன் சொல்வது போல அடையாளம் அல்லது அருஞ்செயல் நடக்கலாம். அதன் பின் அவன் ‘‘வாருங்கள் வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றி, அவற்றுக்கு ஊழியம் புரிவோம்’’ என்று கூறலாம் அவை நீங்கள் அறியாதவை. அந்த இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவனின் சொற்களுக்குச் செவி கொடுக்க வேண்டாம் ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் மீது நீங்கள் முழு உள்ளத்தோடும் அன்பு கூர்கின்றீர்களா என்று அவர் உங்களைச் சோதிக்கிறார். உங்கள் கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றி அவருக்கு அஞ்சி அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் குரலுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு ஊழியம் செய்து அவரைப் பற்றிக் கொள்ளுங்கள்.
(இணைச்சட்டம்13:1-4)

## செயற்பாடு

1. முதலாம் கட்டளையை எழுதுக.
2. இறைவாக்கினரையும் கனவு காண்பவரையும் தேடிச் செல்லும் சமூகத்திற்கு திருவிவிலிய அடிப்படையில் நீர் வழங்கும் பதில் என்ன?
3. உமது விசுவாசம் சோதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நீர் செய்ய வேண்டியது யாது?

இஸ்ரயேல் மக்கள் பல தெய்வ வழிபாடுகள் நிறைந்த சமூகத்தில வாழ்ந்தார்கள். சிலர் அவ்வழிபாடுகளில் நாட்டங்கொண்டு ஒரே இறைவனை மறந்து வாழத் தொடங்கினர். இஸ்ரயேல் மக்கள் மட்டில் இறைவன் கொண்டிருந்த அளவற்ற அன்பினால், அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைக் கொடுத்தார்.

நீங்கள் சென்று விரட்டியடிக்கும் மக்களினங்களை உங்கள் கடவுளாகிய ஆண்டவர் வேரறுப்பார். நீங்கள் அவர்களை விரட்டியடித்து விட்டு அவர்களது நாட்டில் குடியேறுங்கள். உங்கள் முன்னிலையில் அவர்கள் முறியடிக்கப்பட்ட பின் அவர்களைப் பின்பற்றி வஞ்சிக்கப்படாதபடியும் இந்த மக்களினங்கள் தங்கள் தெய்வங்களுக்கு எப்படி ஊழியம் செய்தனவோ அவ்விதமே நாங்களும் செய்வோம் என்று சொல்லி, அவர்களின் தெய்வங்களைப்பற்றி, கேட்டறியாதபடியும் கவனமாயிருங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அவர்களது முறைப்படி செய்யவேண்டாம். ஏனெனில் ஆண்டவர் வெறுக்கும் எல்லா அருவருப்பானவற்றையும் அவர்களுடைய தெய்வங்களுக்கு அவர்கள் செய்தார்கள். தங்கள் புதல்வரையும், புதல்வியரையும் கூட அவர்களின் தெய்வங்களுக்கென நெருப்பில் சுட்டெரித்தார்கள். நான் உங்களுக்கு விதிக்கிற யாவற்றையும் கடைப்பிடிப்பதில் கவனமாய் இருங்கள்.

(இணைச்சட்டம் 12:29-32)

பல்சமயச் சூழலில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை எல்லாம் வல்ல இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மக்களாகக் காப்பாற்ற இறைவன் செயலாற்றிய முறையை திருவிவிலியத்திலிருந்து அறிகிறோம்.

## செயற்பாடு:

- நாட்டை உரிமையாக்கிக் கொள்ளும் போது அழிவிலிருந்து காப்பாற்றப்பட இறைவன் தம் மக்களுக்கு கூறிய அறிவுரை யாது?
- இத் திருவிலிலியப் பகுதியின் அடிப்படையில் உமது வாழ்க்கைச் சூழலை எவ்வாறு அமைத்துக்கொள்வீர்?

அழிவை நோக்கும் பாதையையா?
நிலையான வெற்றிக்கான பாதையையா?
இறைவன் கூறும் அறிவுரையைக் கேளுங்கள்.

மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில் பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம், ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன். என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.

(வி.ப. 20:4-5)

சிலைகள் பக்கம் திரும்ப வேண்டாம் உங்களுக்கெனத் தெய்வப் படிமங்களை வார்த்துக் கொள்ள வேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.

(லேவி. 19:4)

இஸ்ரயேலராகிய தம் மக்கள் சிலைவழிபாடு, விபச்சாரம் போன்ற பாவங்களில் ஈடுபட்டு தம் உறவிலிருந்து பிரிந்தார்கள். எனினும் இரக்கமுள்ளவரும், பாவங்களை மன்னிப்பவருமாகிய தாம் அவர்கள் தம் தீச்செயல்களை விட்டு மனம் திரும்பினால் அவர்கள் அனைவரையும் மீண்டும் தமதாக்கி கொள்வதாக கூறுகின்றார்.

ஆகவே உலகப் போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீயநாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள். இவையே கீழ்ப்படியா மக்கள் மீது கடவுளின் சினத்தை வரவழைக்கின்றன.

கொலோசையர் 3:5-6

ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லிசூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் ' இறையாட்சியை உரிமைப்பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன்.

கலா.5:19-21

செயற்பாடு:

1. சிலை வழிபாட்டுக்கு எதிராக இறைவார்த்தை கூறும் படிப்பினைகளை எழுதிக் காட்டவும்.
2. மக்கள் புரிகின்ற பாவங்களினால் இறைவன் சினம் கொள்வாரா? அத்தகைய பாவங்கள் எவை?
3. சிலை வழிபாட்டுக்கு எதிராக இறைவன் வெளிப்படுத்தியவற்றிலிருந்து நீர் பெறும் செய்தியை எழுதிக் காட்டவும்.

திருவிவிலியத்தின் அடிப்படையில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி சிலைவழிபாடு பற்றி பின்வருமாறு கூறுகிறது.

> சிலை வழிபாடு பொய்த்தெய்வவழிபாட்டை மட்டும் குறிப்பதில்லை. இது விசுவாசத்துக்கு எதிராக அடிக்கடி எழும் சோதனைகளையும் உள்ளடக்குகிறது. இறைவனைத்தவிர ஏனையவற்றை இறைத்தன்மை உடையதாக்குவதும் சிலைவழிபாடு ஆகும். இறைவனுடைய இடத்தில் படைப்புக்களாகிய வேறு தெய்வங்கள், அசுத்த ஆவி, அதிகாரம், சிற்றின்பம் இனம், மூதாதையர், நாடு, பணம் ஆகியவற்றை வணங்கி வழிபடும்போது மனிதன் சிலைவழிபாட்டை செய்கிறான். ''நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது (மத்.6:24) என இயேசு கூறியுள்ளார். விலங்கை வழிபட மறுத்ததாலும் (தி.வெ. 13:14), இத்தகைய வழிபாட்டை தூண்டி விடாதமையினாலும் பலர் மறைசாட்சிகளாயினர். கடவுளின் தனித்துவமான அதிகாரத்தை சிலைவழிபாடு மறுக்கிறது. எனவே இறை ஒன்றிப்போடு சிலைவழிபாடு இணைந்து நிற்காது.
>
> கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 2113

எமது ஆசைகள் தேவைகள் நிறைவேற ஓடி ஓடி உழைக்கிறோம். அதிகாரங்களை மேன்மைப்படுத்தி பயன்படுத்துகின்றோம். உயர்குடியில் பிறந்தவர்கள் என பெருமை பாராட்டிக்கொள்கிறோம். குறிசொல்வோரையும், அஞ்சணம் பார்ப்போரையும் நாடி ஆறுதலை அடைய முயலுகிறோம். சுய நலத்தோடு மனித மாண்பை மதிக்காதிருக்கிறோம். இச் செயல்கள் யாவும் சிலைவழிபாடுகளாக அமைந்துவிடுகின்றன.

## செயற்பாடு:

1. சிலை வழிபாடு என்பது பொய்த் தெய்வங்களை வழிபாடு செய்வது மட்டுமல்ல என்பதை விளக்கவும்.
2. சரியானதை குறிக்கவும்
   இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாக அவருக்கு நம்மை அர்ப்பணித்து வாழ,
   - அ. உலகத் தன்மையையும் வேறுதெய்வங்களையும் ஏற்றுக்கொள்வோம்.
   - ஆ. உலகத் தன்மையையும் வேறுதெய்வங்களையும் விட்டுவிடுவோம்.
   - இ. உலகத் தன்மையையும் வேறுதெய்வங்களையும் பின்பற்றுவோம்.
   - ஈ. உலகத் தன்மையையும் வேறுதெய்வங்களையும் அனுமதிப்போம்.

மனித வாழ்க்கை சவால்கள் நிறைந்த ஒன்றாகும். இச் சவால்களை வெற்றிகொள்வதற்காக மனிதர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அதற்கு முடிவேயில்லை. கிறிஸ்தவர் எமக்கு பதில் கிடைக்குமா?



ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர் அத்தகையோர் சிலைகளை நோக்காதவர்; பொய்யானவற்றைச் சாராதவர்.

(திருப்பாடல் 40:4)

ஆகவே, இஸ்ரயேல் வீட்டாருக்குச் சொல்:
தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே:
திரும்புங்கள், உங்கள் சிலைகளை விட்டுத்
திரும்புங்கள்; உங்கள் சிலைகளை விட்டுத் திரும்புங்கள், உங்கள்
அருவருப்புகள் அனைத்தையும்
விட்டு உங்கள் முகத்தைத் திருப்புங்கள்.

(எசே. 14:6)

ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டும் என்பது கட்டளைகளில் முதலாவது கட்டளை மட்டுமல்ல, திருலிலிலியம் முழுவதுமே வலியுறுத்துவதோடு, அப்படி வாழ்பவர்களை இறைவன் ஆசீர்வதிக்கிறார் எனவும் கூறுகிறது. அதுமட்டுமல்ல, சிலைவழிபாடுகளை விட்டு தம்மிடம் திரும்பிவருபவர்களை ஏற்றுக்கொள்கிறார் என்றும் திருவிவிலியம் கற்பிக்கின்றது.

## சிந்திப்போம்:

1. எமது பிரச்சனைகளுக்கு இறைவன் பதிலளிக்கிறார் என விசுவசிப்போம்.
2. நம் நாட்டுக்கு இறைவன் அமைதியை வழங்குவார் என்பது எமது விசுவாசமாகும்.
3. நமது பங்குக்குடும்பத்தில் சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் மையமாக அமைவது திருப்பலியாகும் என விசுவசிப்போம்.
4. நாம் இறைவனுடன் நெருங்கி உறவாடும் பொழுது அவரது அன்பை அனுபவிக்கமுடியும்.

**வாழ்க்கைக்கு**

சிலை வழிபாட்டிலிருந்து எம்மை விடுவித்து உமது பிள்ளைகளாக இல்வுலக வாழ்வில் வெற்றிகொள்ள எம்மைத் தெரிந்தெடுத்த விண்ணகத் தந்தையே, எம் வாழ்நாள் முழுவதும் உம்மைப் புகழ்கின்றோம்.